


உ




# பூர்ண பலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாத வெளியீடு

(மாசி – FEBRUARY – 2022)

ஸ்ரீ மகா பெரியவா பூர்ண பலத்துடன்



“லோகா சமஸ்தா சுகினோ பவந்து”

“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்”

# உள்ளடக்க அட்டவணை

தோரண வாயில் ..... 4

ஸ்ரீ மஹாபெரியவா அருளுரை ..... 5

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (1) ..... 7

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (2) ..... 8

பெண்களுக்கு மோக்ஷம் /ஸ்வர்கம் கிடைக்குமா? ..... 10

வைணவப் பெரியோர்கள் வரலாறு..... 13

ரத சப்தமியின் சிறப்பு ..... 15

பலன் தரும் பதிகங்கள்..... 17

நம்பினோர் கெடுவதில்லை..... 21

தெரிந்த புராணம்; தெரியாத கதைகள் ..... 23

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணை ஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம் மற்றும் வடிவம்: VVSS Trust-இன் நண்பர்கள்

அட்டை மற்றும் பக்கங்கள் 6, 7, 8, 13, 21, 24-இல் உள்ள படங்கள் அனைத்தும் கூகிள் படத் தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரண வாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களுக்கு நெஞ்சார்ந்த அன்பு வணக்கங்கள். மூன்றாவது இதழ் உங்கள் பார்வைக்கு வருகிறது. எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே ஆதரவு அளித்து வருகிறீர்கள். அதற்க்கு என் நன்றி. இதுபோன்ற ஒரு மின்னூலை தொடங்கும்போது, எதை எதிர்பார்த்து தொடங்கினேனோ. அது நடந்து வருகிறது. ஆம்! வாசகர்களாகிய உங்களின் பங்களிப்பை எதிர்பார்த்தேன். அதே போல பலரும் தங்கள் படைப்புகளை அனுப்பி வருகிறீர்கள். கடைசி நேரத்தில் வரும் கட்டுரைகளை படித்து பிழை நீக்கம் செய்து வெளியிட கால அவகாசம் இல்லை எனவே ஒரு சில கட்டுரைகளை பிரசுரிக்க இயலவில்லை. வருங்காலத்தில் நீங்கள் முன்கூட்டியே உங்களின் படைப்புகளை அனுப்பி வையுங்கள், கட்டாயம் பிரசுரிக்கிறோம்.

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க, "செல்வத்தின் திறவுகோல்" புத்தகம் மீண்டும் அச்சுப்போட ஆர்டர் கொடுத்து விட்டேன், வந்ததும் அனுப்பித்தருகிறேன். அதே போல் வருகின்ற மஹாசிவராத்திரி சிறப்பு பதிப்பாக பலன் தரும் பதிகங்கள் என்ற சிறு நூலும் தயார் செய்து அச்சுக்கு அனுப்பி விட்டேன். அது வந்ததும் தங்களின் தேவைக்கு தக்க பிரதிகளை அனுப்பித் தருகிறேன்.

மஹாபெரியவாளின் அனுகிரஹத்தாலும், அன்னை காமாட்சியின் கருணையாலும், என்னால் முடிந்த அளவு இறைப்பணிகளை செய்து வருகிறேன். இன்றுபோல் நீங்கள் எல்லோரும் தொடர்ந்து உங்கள் ஆதரவை தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி.வேணுகோபால்

**********

# ஸ்ரீ மஹாபெரியவா அருளுரை

## குருவின் தகுதி




இடம்: சிவாஸ்தானம் பிரம்மபுரீஸ்வரர் திருத்தலம், தேனம்பாக்கம்
Image taken at Sivasthanam Brahmabureeswarar Temple, Thenampakkam

பழைய காலத்தில் குருவினிடத்தில் சென்று வித்யை கற்றுக் கொள்கிற சிஷ்யனுக்கு “விநேயன்” என்று பெயர். அதற்க்கு விநயத்தை உண்டுபண்ணப்பட்டவன் (அடக்கம்) என்று அர்த்தம். இப்போதான் ஸ்டூடெண்ட், மாணவன், பையன் என்று பெயர்.விநயம்தான் குருவினிடத்தில் சென்று கல்வி கற்றுக் கொண்டதின் அடையாளம்.


நம் ஆதி ஆச்சார்யாளின் முதல் சிஷ்யருக்கு "பத்ம பாதாச்சார்யார்" என்று பெயர்.அவரின் குரு பக்திக்கு ஈடு, இணையே கிடையாது. நல்ல குணங்கள் நம் குழந்தைகளுக்கு வரவேண்டுமென்றால், படிக்கும் காலத்தில் அவன் சம்பளம் கொடுத்து படிக்க கூடாது.வாத்யார் சம்பளம் வாங்குபவராக இருக்க கூடாது. இப்போது இப்படி இல்லா ததினால்தான், உயர்ந்த கல்வியின் பயன் நேர்மாறாக போய்விடுகிறது.

பழங்காலத்தில் படிக்கின்ற மாணவன் வீடு வீடாக சென்று பிட்சை எடுத்துவந்து, அதை குருவினிடத்தில் கொடுத்து பிறகு அவர் கொடுப்பதை உண்டு வாழ வேண்டும். அப்போதான் அடக்கம் வரும். கெட்ட குணம், கெட்ட நடத்தை உள்ள மாணவனை ஆசிரியர் வைத்துக் கொள்ள மாட்டார். அவனை விலக்கி வைப்பார் அல்லது தண்டனை கொடுத்து திருத்துவார். இப்போ அப்படி செய்ய முடியுமா? நான் உனக்கு சம்பளம் தருகிறேன். நீ என்னை தண்டிக்க

முடியாது என்பார்கள். இப்போ படிப்பு வரவில்லை என்றால். ஹோட்டல்,சினிமா கொட்டகை என பல வழிகளை உண்டாக்கி வைத்து இருக்கிறார்கள்.



உண்மையான வித்யை வேண்டுமென்றால் குருவை நாடி செல்ல வேண்டும். குருவும் சிஷ்யனை ஏற்று அவனை தன சொந்த பிள்ளையைப் போல நடத்தி, தனக்கு தெரிந்த வித்யாயை ஒளிவு மறைவு இல்லாமல் கற்றுக் கொடுக்க வேண்டும். குரு சிஷ்ய பாவம் மிகவும் உன்னதமானது.இப்படி கல்வி கற்றால்தான் அடக்கம் வரும் நல்ல குணங்கள் வளரும். எனக்கென்னவோ பழங்கால குருகுலமுறைக்கே நமது கல்வித் திட்டங்கள் அமைய வேண்டும் என்றே தோன்றுகிறது. அன்பு அடக்கம் நேர்மை உண்மை இவை எல்லாம் ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும் என்றால் அது குருகுல கல்வியால் மட்டுமே முடியும் என்று தோன்றுகிறது.



ஹர ஹர சங்கர


ஜெய ஜெய சங்கர

**********

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (1)

*திருக்கோலக்கா (சீர்காழி)*

சப்த புரீஸ்வரர் (திருத்தாள முடையார்) திருக்கோவில், சீர்காழி



இறைவன் பெயர்: தாளம் கொடுத்த ஈஸ்வரர்

இறைவியின் பெயர்: த்வணி பிரதாம்பாள் (ஓசை கொடுத்த நாயகி)

அமைவிடம்: நாகை மாவட்டம், சீர்காழியில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

ஸ்தல சிறப்பு: ஞானசம்பந்த பெருமான் முதல் முதலாக ஸ்தல யாத்திரை சென்ற திருத்தலம். தன பிஞ்சு கைகள் நோக, தாளமிட்டு பாடி வருகையில். குழந்தையின் கைகள் நோகுமே என தங்கத்தால் ஆன தாளத்தை அருளினார் ஈசன். பொற்றாளத்தில் ஓசை வராதே அதனால் அதற்க்கு ஓசை கொடுத்தாள் அம்பாள், ஓசை பிறந்தது. எனவே அம்பாளுக்கு ஓசை கொடுத்த நாயகி என பெயர் உண்டாயிற்று.

பிற்காலத்தில், உமையான தன குழந்தை பேசவேண்டும் என ஒரு தாய் பிரார்த்திக்க அதற்க்கு செவி சாய்த்த அன்னை அக்குழந்தைக்கு பேச்சு வன்மையை வழங்கினாள். அதற்க்கு நன்றி கடனாக அந்த அம்மையார் பொன்னால் செய்த ஒரு தாளத்தை அளித்தாள். இன்றும் அதனை இங்கு காணலாம். இந்த சுவாமி அம்பாளுக்கு, அபிஷேக அர்ச்சனை செய்து தேன் நிவேதனமாக படைத்து அந்த தேன் பிரசாதத்தை குழந்தைகளுக்கு கொடுத்தால். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவர். இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் வளரும், அவ்வளவு ஏன்? பேச்சு குறைபாடு உள்ள குழந்தைகள் கூட பேச தொடங்கி விடுவார்கள் என்பது கண்கூடாக காணலாம்.

அவசியம் ஒருமுறை இந்த ஆலயம் சென்று வழிபாடு செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

*****

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (2)

*திருநான்கூர்*

பதினோரு திவ்ய தேசங்களும், பதினோரு கருட சேவையும்.

அமைவிடம்: நாகை மாவட்டம், சீர்காழியில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

நாகை மாவட்டம் சீர்காழியில் இருக்கிறது "மணிமாடக் கோவில்" என அழைக்கப்படும் திவ்ய தேசம். இதனை சுற்றி உள்ள ஐந்து திவ்ய தேச திருத்தலம். ஆக மொத்தம் ஆறு மற்றும் இந்த ஊரை சுற்றி உள்ள அதாவது சுமார் இரண்டு மைல்கள் சுற்றளவில் உள்ள ஐந்து திவ்ய தேசங்கள், ஆக மொத்தம் பதினோரு திவ்ய தேசங்கள் உள்ளடக்கியது.




ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் அமாவாசைக்கு மறுநாள் எல்லா திவ்ய தேசங்களில் இருந்தும் பெருமாள் தத்தம் வாகனங்களில் எழுந்தருளி மணிமாடக் கோவிலுக்கு எழுந்தருளி காட்சி அளித்து பக்தர்களுக்கு அருள்பாலித்து அருள்வது கண்கொள்ளா காட்சியாய் இருக்கும். உலக பிரசித்தி பெற்ற கருடசேவை இது.

அந்த பதினோரு திவ்ய தேசங்கள் வருமாறு:

- தீருக்காவலம்பாடி
- அரிமேய விண்ணகரம்
- திருவன் புருடோத்தமம்
- திரு செம்பொன் செய்க்கோவில்
- திருமணி மாடகோவில்
- திருவைகுந்த விண்ணகரம்
- திருத்தேவனார்
- திருத்தெற்றியம்பலம்
- திருமணிக் கூடம்
- திருவெள்ளக்குளம்
- திருப்பார்த்தன் பள்ளி

ஆண்டுதோறும் இந்த பதினோரு பெருமாள்களை மங்களா சாசனம் செய்ய திருமங்கை ஆழ்வார் எழுந்து அருள்வதாக ஐதீகம். இந்த பதினோரு ஊர்களில் இருந்து பெருமாள் தத்தம் வாகனங்களில் எழுந்தருளி, சிறு ஓடை வயல்வெளிகள் இவைகளை கடந்து வரும்போது அறுவடைக்கு தயாராக இருக்கும் கதிர்களை மிதித்து வரும்போது அப்போது எழும் "சல சல" என எழும்பும் ஓசை கேட்டு ஆழ்வார் எழுந்தருளி வருவாய் எண்ணி பக்தர்கள் ஆர்பரிப்பர் அதனால் வருடா வருடம் விளைச்சலும் அமோகமாக இருக்கும் என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் நம்பிக்கை.

இந்திய மட்டுமன்றி உலகெங்கிலும் இருந்து பக்தர்கள் வந்து இந்த கருடசேவையை தரிசிப்பர். வாய்ப்பு வசதி உள்ளோர் ஒருநாள் மட்டும் சீர்காழியில் தங்கினால். அதற்க்கு என சேவை புரிய காத்திருக்கும் பட்டர் பெருமக்களின் உதவியுடன் ஒரே நாளில் பதினோரு திவ்ய தேசங்களையும் ஆட்டோ, கார் மூலம் சென்று தரிசித்து வரலாம்.

*****

# பெண்களுக்கு மோக்ஷம் /ஸ்வர்கம் கிடைக்குமா?



- ஸ்ரீமதி பாமா வேணுகோபால்

அது ஒரு புதன் கிழமை. வழக்கம் போல் வரதராஜ பெருமாள் கோவிலுக்கு சென்றேன். சக்கரத்தாழ்வார், நரசிம்மர், தாயார், பெருமாள் சன்னதிகளுக்கு சென்று சேவித்து வந்து, வன்னிமரத்தின் மேடையில் வந்து அமர்ந்தேன்.அனந்த சரஸ் புஷ்கரணியில் இருந்து "சில் என்று வீசிய குளிர்ந்த காற்று, மனசுக்கும் உடலுக்கும் இதமாய் இருந்தது.

எனக்கு தெரிந்த பத்மாசினி மாமியும் வந்து அமர்ந்தார். ஸ்ரீ வைஷ்ணவர். முகம் சற்று வாடினாற்போல இருந்தது. "என்ன மாமி உடம்பு சரியில்லையா? பேசிக்கொண்டே கொஞ்சம் நகர்ந்து உட்கார்ந்தேன் (Social Distance? பயம்??) அதெல்லாம் ஒண்ணும் இல்லை, மனசு சரியில்லை! என்றார், ஏன்? என்ன ஆச்சு?' எல்லாம் எங்க ஆத்துக்காரர்தான்...ஸ்னானம் பண்ணிட்டு வருவார். பஞ்சபாத்ர உத்தரணி, வட்டில், திருமண் பெட்டி. கண்ணாடி எல்லாம் எடுத்து வைப்பேன். இன்னிக்கு எதோ மறதி, கண்ணாடி வைக்கலை, அதுக்குள் கத்த ஆரம்பிச்சுட்டார் "கவன கொறச்சல், பொம்மனாட்டிகளுக்கு விதிச்சதே புருஷன் கைங்கர்யம்தான், கோரவில்லா கைங்கர்யம் செஞ்சாதான். அடுத்த ஜென்மா, ஆண் ஜென்மா, அப்போதான் பூஜை புனஸ்காரம் செய்து ஆச்சார்ய கைங்கர்யம், பெருமாள் கைங்கர்யம் செஞ்சு. கடைசீயா பரமபதம் சித்திக்கும் தெரிஞ்சுக்கோ, என்றார். ஏன் மாமி நான் தெரியாமத்தான் கேட்கிறேன். பெண் ஜென்மம் எடுத்துட்டா அவாளுக்கு மோட்ஷ ப்ராப்தியே கிடைக்காதா? புடவைத்தலைப்பில் முகம் பதித்து விசும்ப ஆரம்பித்தாள். எனக்கு வந்ததே கோபம், மாமி மேல் அல்ல அவர் கணவன் மேல் "யார் சொன்னது இப்படி, பெண்களுக்குத்தான் முதலில் மோக்ஷ பிராப்தி. எங்கள் சம்பிரதாயத்தில் நிறைய கதை இருக்கு. எங்க மஹாபெரியவாளே சொல்லி இருக்கா! உடனே அந்த மாமி, அப்படியே எனக்கும் அதை சொல்லேன் என்றாள். இங்கே இல்லை மாமி. எனக்கு ஆத்தில் கொஞ்சம் காரியம் இருக்கு, முடிஞ்சபோது எங்காத்துக்கு வாங்கோ, சாவகாசமா பேசலாம் என்று புறப்பட்டேன். பத்து நிமிஷத்துக்கெல்லாம் வந்து கதவை தட்டினால் அந்த மாமி "நான்தான், ஆத்தில் சின்னவன் இருக்கான், எனக்கு காரியம் ஒண்ணுமில்லை, தளிகையும் ஆச்சு; அவர் திருவல்லிக்கேணி போயிருக்கார். சாய்ங்காலம்தான் வருவார். நீங்க சொல்லுங்கோ என்றார். வேத பாடசாலை குழந்தைகளுக்கு மோர் மிளகாய் போட்டுக்கொடுக்க எங்காத்துக்காரர். அஞ்சு கிலோ குடமிளகாய் வாங்கி வந்திருக்கார். ஆய்ந்து கொண்டே பேசுவோம் என மிளகாயோடு உட்கார்ந்தேன. மிளகாய் ஆய்வதற்கு என்னோடு அவரும் சேர்ந்து கொண்டார்.

நான் கதையை தொடங்கினேன். ஒரு ஊரில் பெரிய பண்டிதர், ரொம்ப சாஸ்திரம் எல்லாம் படிச்சவர், அக்னிஹோத்ரி. அவரின் மனைவி ரொம்ப நல்ல மாதிரி, சாது. கணவருக்கு பணிவிடை செய்வதைத் தவிர வேறு ஏதும் அறியாதவர். ஒரு வஜனம் சொல்வாளே "அடுப்பே திருப்பதி, ஆம்படையானே குலதெய்வம் என்று" அப்படி வாழ்ந்தவள். வயசாச்சு. அவருக்கு முன்னாலே போய் சேந்துட்டா "குடுத்து வச்சவள்" குறுக்கிட்டாள் மாமி. நான் தொடர்ந்தேன். ரெண்டு வருஷம் கழிச்சு இவரும் கால கதி அடைந்தார்.

புண்ணிய ஆத்மா அல்லவா? அழைத்துப் போக தேவ தூதர்கள் வந்தனர். அழைத்து கொண்டு போகும்போது, ஓரிடத்தில் "நரகம் உங்களை வரவேற்கிறது" என ஒரு வளைவு. தூதர்கள் சொன்னார்கள்:"சுவாமி பயப்படாதிங்கோ உங்களுக்கு இது அல்ல", தொடர்ந்து நடந்தனர். வழியில் இந்திரா லோகம், சந்திர லோகம் என ஏதேதோ சொல்வார்களே அதெல்லாம் வந்தது. இவர் ஒவ்வொன்றாக எட்டி, எட்டி பார்த்து யாரையோ தேடினார். ஏதும் சொல்லாமல் கடைசியில் அவர் சேர வேண்டிய பிரம்ம லோகம் வந்தது. "சுவாமி நீங்கள் உள்ளே செல்லலாம்"- என்றனர் தூதர்கள். அவரோ கொஞ்சம் இருங்கள், நான் நரகத்தை போய் பார்த்துவிட்டு ஒரு நிமிஷத்தில் வருகிறேன் என்றார். அவர்கள் எதற்கு நரகத்திற்கு நாங்களும் கேட்கணும் என்று நினைத்தோம். ஒவ்வொரு லோகத்திலும் எட்டி எட்டி பார்த்து யாரையோ தேடினீர்களே. யாரை? அதற்க்கு அவர் கூறினார். வேறு யாரையும் அல்ல என் மனைவியைத்தான், அவள் எனக்கு முன்பே கால கதி அடைந்து விட்டாள். நீங்கள் காட்டிய எந்த லோகத்திலும் இல்லை, அதுதான் ஒருவேளை நரகத்தில் இருக்கிறாளோ பார்க்கலாம் என கேட்டேன் என்றார். தூதர்கள் சற்று கோபத்துடன் என்ன? உமது மனைவி நரகத்தில் இருப்பார் என நீரே தீர்மானித்து விட்டீரா? இப்போ அவரை பார்க்கணுமா? அதோ அங்கே பாருங்கள் என்றனர். அது "பரமபதம், அங்கே சென்றவர்கள் மீண்டும் வருவதில்லை, அந்த பரம பதத்தில் பெருமாள் தன் பத்தினியான தாயாரோடு ஜம் என்று வீற்று இருக்க. முப்பத்து முக்கோடி தேவர்கள்,ஆழ்வாராதிகள், ஆச்சர்ய புருஷர்கள், உத்தமமான ஆத்மாக்கள் புடைசூழ வீற்றிருந்தார். அந்த கூட்டத்தில் அவரின் மனைவி பூவோடும் பொட்டோடும் சர்வாலங்கார பூஷிதையாய். வண்ண வண்ண மலர்களை பெருமாளின் பாதத்தில் சேர்த்தபடி பல்லாண்டு பாடிக்கொண்டு இருந்தாள். அதை பார்த்ததும் "ஐயோ இது அநியாயம், இவள் வேதம் படிக்க இல்லை, சாஸ்திரம் தெரியாது என்போல நித்ய அக்னிஹோத்ரம் செய்தது இல்லை. இவளுக்கு பரமபதமா? எல்லாம் செய்த எனக்கு ப்ரம்மலோகமா? அங்கே போனால் புண்ய பலன் தீர்ந்ததும் மீண்டும் பூமிக்கு திரும்பணம். இவள் இங்கேயே நித்ய வாசம் செய்வாள்,"அநியாயம் இல்லையா?

அமைதியாய் பதில் சொன்னார் தேவ தூதன் "ஒரு பெண்ணானவள் தன் இல்லத்திற்கு செய்யும் தினசரி கடமையே வேதம் ஓதுதற்கு சமம், அடுப்படியில் தினம் வேகறாளே. அதுதான் அவளுக்கு அக்னிஹோத்ரம். உங்களுக்கு வாரிசுகளை பெற்றுத் தருகிறாள் அல்லவா. அது ஆயிரம் அஸ்வமேத யாகம் செய்வதற்கு சமம். நீங்கள் காலகதி அடைந்த நாளில் இருந்து இன்றுவரை ஒருவருடம் ஆகிறது. இவ்வளவு நாள் உங்களுக்கு பசி தாகம் எடுக்கலையே அது எப்படி என்றார். அவரும் அதுதானே பசிக்கவே இல்லையே. தாகமே எடுக்கலையே எப்படி என்றார். அதற்கு தேவ தூதர் அங்கே பாருங்கள் "உங்களுக்காக உங்கள் புதல்வர்கள், நீங்கள் இறந்த நாளில் இருந்து உங்களுக்கு செய்ய வேண்டிய கர்மாக்களை செய்து வருகிறார்கள். அதற்கு உறுதுணையாக அவர்களின் பத்தினிகள். அதுதான் உங்களின் நாட்டுப்பெண்கள் இருக்கிறார்கள். அப்படித்தானே உங்கள் மனைவியும் உங்களுக்கு உறுதுணையாய் இருந்து, நீங்கள் உங்கள் பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய காரியங்களை செய்தீர்கள்? அதுதான் அவர்கள் செய்த யாகம், தானம், தர்மம் எல்லாம் புரிந்ததா? என்றனர்.

அவர் உடனே, "பெருமாளே பெருமாளே என பெருங்குரல் எடுத்து கூவினார், பெருமாளும் தன்னை யாரோ அழைக்கிறார்களே. என எட்டிப் பார்த்து, "ஓ நீங்களா? என்ன வேண்டும் என கேட்க இவரோ "பெருமாளே எனக்கு பிரம்ம லோகம் வேண்டாம் "வேறு என்ன வேண்டும்?" இப்போதே நான் பூலோகத்தில் ஓர் பெண்ணாக பிறக்க வேண்டும். ஒரு உத்தமனுக்கு வாழ்க்கை

பட்டு, அவனுக்கு தொண்டு புரிந்து இறுதியில் எனக்கு பரமபதம் கிடைத்து உன்னோடு இருக்க வேண்டும். அதற்க்கு அருள் புராணம் என வேண்டினார். பெருமாளும் அவ்வாறே ஆகுக என வரம் அருள அப்போதே பூலோகத்தில் ஓர் பெண் மகவாக பிறந்தார்.

"மாமி இதுபோல நிறைய தத்துவக் கதைகள் எங்கள் சம்ரதாயத்திலும், சாஸ்த்திரத்தில் உண்டு. எங்கள் ஆச்சாரியார் மஹாபெரியவாளே சொல்லி இருக்கார். நான் என் பாணியில் சொன்னேன். வேணுமானால் எங்க ஆத்துக்காரர் வந்ததும். பெரியவாளின் புஸ்தகத்தை எடுத்துத் தரேன் என்றேன். மாமியும் மகிழ்ச்சியுடன் போரும். மாமி, பெரியவா விஷயத்தில் யாராவது பொய்சொல்லுவாளா? எங்காத்துக்காரர் இனிமேல் சொர்கம் நரகம் என பேசினால் சொல்லறேன். என "ஜில்" என ஒரு டம்பளர் மோரைக் குடித்து விட்டு சந்தோஷமாய் புறப்பட்டாள்.

கதை அல்ல. நிஜம். மங்கையராகப் பிறத்தற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என சும்மா சொல்லவில்லை. அனுபவித்தே சொன்னார்கள். மங்கையர்கள் நினைத்தால், இவ்வுலகிலும் சொர்க்கம். அவ்வுலகிலும் சொர்க்கம்.

*****

# வைணவப் பெரியோர்கள் வரலாறு

ஸ்ரீ வைஷ்ணவ பெரியோர்கள், அருளாளர்கள் வரிசையில் இப்போது நாம் பார்க்க இருப்பது ஓர் மாபெரும் அருளாளர். ஆம் வரதராஜ பெருமாளுக்கு விசிறி கொண்டு வீசி. அவருடன் பேசிக்கொண்டு இருக்கின்ற பெரும் பாக்கியம் பெற்றவர், அவர்தான், **திருக்கச்சி நம்பிகள்.**



இப்படி இருக்கையில் ஒருநாள், ஒரு ஸ்ரீ வைஷ்ணவ பெரியவர், நம்பிகளை அணுகி. சுவாமி வரதனிடம் பேசும் பெரும் பாக்யம் பெற்றவர் தாங்கள். எனக்காக பெருமாளிடம் ஒன்றை விண்ணப்பியுங்கள். அதாவது, என்னால் இயன்ற அளவு பெருமாளுக்கும், அடியவர்களுக்கும் கைங்கர்யம் செய்து வருகிறேன். எனக்கு இந்த பிறவியிலேயே பரமபதம் அடையும் பாக்யம் உண்டா? என பெருமாளிடம் கேட்டு சொல்லுங்கள் என்றார். நம்பிகளும் அதற்க்கென்ன கேட்கிறேன் நாளை வாரும் என்றார். மறுநாள் அந்த அடியவர் வர. நம்பிகளும் நான் பெருமாளிடம் உம்மைப்பற்றி கேட்டேன். அவரும், ஆஹா அவருக்கு இல்லாததா. கட்டாயம் பரமபத பிராப்தி உண்டு என கூறினார் என்றார். அப்பெரியவர் அகமகிழ்ந்து நம்பிகளை வணங்கி சென்றார். அவர் போனபின்தான் நம்பிகள் நினைத்தார். "இது நாள் வரை நம்மைப் பற்றி பெருமாளிடம் கேட்க மறந்தோமே? நமக்கு பரமபத பாக்யம் கிடைக்குமா? நமக்கு கிடைக்காமலா போகும்? பெருமாளுக்கு விசிறி கைங்கர்யம் செய்யும் நமக்கு கண்டிப்பாய் கிடைக்கும். எதற்கும் நாளை கேட்டுவிடலாம் என எண்ணியவாறே உறங்கிப்போனார்.

மறுநாள், நம்பிகள் விசிறிக்கொண்டே, சுவாமி எனக்கு பரமபத பிராப்தி உண்டுதானே என கேட்க. பெருமாள் சிரித்துக் கொண்டே, உனக்கு இல்லை என்றார்; அதிர்ந்து போன நம்பிகள். பெருமாளே! என்ன சொல்கிறீர்கள் என கேட்க. பெருமாளும் ஆமாம் அப்படித்தான் என்றார். பெருமாளே நான் உங்களுக்கு தினமும் விசிறி கொண்டு வீசுகிறேனே. அதற்காகவாவது என் முடிக்கும் முன்பே "ஆமாம். நீ வீசினாய். நான் பேசினேன். இரண்டுக்கும் சரியாய் போய்

விட்டது. பரமபதம் பிராப்தி கிடைக்க வேண்டுமானால் உனக்கு ஒரு ஆச்சார்யன் சம்மந்தம் வேண்டும். பெருமாள் சம்மந்தம் இருந்தாலும். அது பரமபதத்தை பெற்றுத் தராது. அதை ஆச்சார்யன் மூலமே அடைய உணர்த்தினார்.

அதன் பிறகே திருக்கச்சி நம்பிகள். ஆளவந்தாரின் ஆச்சார்ய சம்மந்தம் பெற்றார்.

ஆக எந்த ஸம்ப்ரதாயமாய் இருந்தாலும், ஆண்டவனுக்கு முன்னாள் நமக்கு ஆச்சார்யன். குருவின் தொடர்பு வேண்டும். "குருவே பிரம்மா. குருவே விஷ்ணு. குருவே மகேஸ்வரன், பிரம்மமும் அவரே.

குருவருள் இருந்தாலே திருவருள் கிடைக்கும்!

*****

# ரத சப்தமியின் சிறப்பு

ஏழு குதிரைகள் பூட்டப்பெற்ற ரதத்தை, அருணன் என்ற தேரோட்டி ஓட்ட, அதில் பவனி வருபவரே சூர்யபகவான். தேவர்களின் தாயாரான அதிதிக்கு, கச்யப மகரிஷிக்கும் பிறந்தவர்தான் சூரியன். நமக்கு ப்ரத்யக்ஷமாக காட்சி அருள்பவர் சூரியன். முழுமுதற் கடவுள். இவர் தென் திசையில் இருந்து வடக்கு திசை நோக்கி தனது ரதத்தினை திருப்பி செலுத்தும் நாளே "ரத சப்தமி" என அழைக்கப்படும்.



இன்று அனைவரும் அதிகாலை எழுந்து ஏழு எருக்கன் இலைகளை எடுத்து, அதோடு கொஞ்சம் மஞ்சள், அக்ஷதை, பசுஞ்சாணி இவைகளை வைத்து தங்கள் தலையின் மீது வைத்து "ஸப்த ஸப்திப் ப்ரியே தேவி" என்ற மந்திரத்தை உச்சரித்து ஸ்நானம் செய்ய வேண்டும். இதன் மூலம் ஆரோக்கிய வாழ்க்கையை அருளும் சூரிய பகவானின் அருளை பெற்று சுகமாய் வாழலாம்.

மாதா மாதம் வரும் "சப்தமி" திதியும் சூரிய வழிபாட்டிற்கு உகந்தது. அன்று அதிகாலை எழுந்து முறையாக ஸ்நானம் செய்து சூர்ய நமஸ்காரம், அருண ப்ரஸ்னம், ஆதித்ய ஹ்ருதயம் போன்றவைகளை ஜெபித்தால் அளவற்ற நன்மை அளிக்கும்





நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களிலும் அது சிவஸ்தலமாக இருந்தாலும், பெருமாள் கோவிலாக இருந்தாலும் எவ்வித பேதமும் இல்லாமல் இந்த ரத சப்தமி விழா கொண்டாட படுகிறது. திருப்பதி தொடங்கி உள்ளூர் ஆலயங்கள் எல்லாவற்றிலும் கொண்டாப்படும் இந்த விழா நம் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு.

*****

# பலன் தரும் பதிகங்கள்

அனைவருக்கும் நமஸ்காரம்.

உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் உயிர்வாழ சக்தி தேவை. சிறு குழந்தை முதல் வயது முதிர்ந்த முதியோர் வரை அனைவருக்கும் சக்தி மிகவும் முக்கியம் நாம் நோய்வாய்பட்டிருக்கும் போது நமது ஆரோக்கியத்திற்காக ஊட்டச்சத்து ஏற்பட டானிக் மருந்துகள், மாத்திரைகள், ஊசிகள் முதலியவற்றை மருத்துவர் சிபாரிசு செய்கிறார் அதனால் நமக்கு சக்தி கிடைக்கிறது. அது போல் ஒவ்வொரு ஆணிற்கும் சக்தி தரவல்ல அரிய மருந்து முதலில் தாய், பிறகு ஆயுட்காலம் முழுவதும் பூரண சக்தியை அளிப்பவள் மனைவி அதே போன்று ஒவ்வொரு பெண்ணிற்கும் அவளை கண்ணின் இமை; போலக் காத்து சக்தியை அளிப்பவன் கணவனே. இதைத் தான் எல்லோருக்கும் உணர்த்துவதற்காக நம் எம்பெருமான் ஆண்பாதி பெண்பாதியாகத் தோன்றினார். ஆகவேதான் திருமணப் பந்தம் நடைபெறுகின்றது. ஆனால் பலருக்கு பல காரணங்களால் திருமணம் தடைப்படுகின்றது. தடைப்படுகின்ற திருமணங்கள் இனிதே நடைபெற பலன்தரும் பதிகங்களிலுள்ள திருமணம் நடைபெற உதவும் பதிகத்தை பக்தியுடனும் நம்பிக்கையுடனும் பாராயணம் செய்து பலனை பெறலாம் இப்பதிகத்தைப் பற்றி இறைவனின் பாதக் கமலங்களை வேண்டி இத்தொடரில் எழுதுகின்றேன்.

## பதிகம் - 2

## திருமணம் இனிதே நடைபெறும் பதிகம்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கள் பேறு”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப நல்ல வாழ்க்கைத்துணை அமைந்தால் வாழ்க்கை வைரம் போல பிரகாசிக்கும்.

### பதிக வரலாறு

திருஞான சம்பந்தர் திருமருகில் எழுந்தருளியுள்ள மாணிக்கவண்ணரை வணங்குவதற்காக ஆலயத்திற்கு வந்தார். அது சமயம் ஒரு வணிகப் பெண்ணின் அழுகுரல் கேட்டது. வணிகப் பெண்ணை மணம் புரிய இருந்தவன் இரவில் துயிலும் போது பாம்பு கடித்து இறந்துவிட்டான். அதனால்தான் வணிகப் பெண் அழுது புலம்பினாள். அவளின் அத்துயரம் நீங்கி இறந்தவன் உயிர்பெற்று எழுந்து அவர்களின் திருமணம் இனிதே நடக்க அருளும்படி இறைவனை வேண்டி பதிகம் பாடினார். பதிகம் முடிந்ததும் இறந்தவன் உறக்கம் கலைந்து எழுவது போல எழுந்தான். பிறகு திருமணமும் இனிதே நடந்தது. இன்றும் திருமணமாகாதவர்கள் இப்பதிகத்தைப் பாராயணம் செய்து பலன் பெறுகின்றனர்.

திருமருகல் பண்: இந்தளம்

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே

சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே

அறையார் கழலும் அழல் வாயரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாயிவளை
இறையார் வளைகொண் டெழில்
வவ்வினையே

ஒலிநீர் சடையில் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாயிவளை
மெலிநீர் மையள் ஆக்கவும்
வேண்டினையே

துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீல கண்டம் உடையாய் மருகல்
கணிநீல வண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே

பலரும் பரவப்படுவாய் சடை மேல்
மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே

வழுவாள் பெருமான் கழல் வாழ்களனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே

இலங்கைக்கு இறைவன் விலங்கல்
எடுப்பத்
துலங்கவ் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகல் பெருமான்
அலங்கல் அவளை அலர் ஆக்கினையே

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாத தொர் தீத்திரளாய் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக் கினையே

அறிவில் சமணும் அலர் சாக்கியரும்
நெறியல்லன செய்தனர் நின்றுழல்வார்
மறிஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயல்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே

திருச்சிற்றம்பலம்

**வாழ்க்கை அனுபவம்**

இப்பதிகத்தை நம்பிக்கையுடன் பாராயணம் செய்தால் கண்டிப்பாக இறைவன் அருளால் திருமணம் விரைவில் இனிதாக நடைபெற்றதற்கு பல சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்றை எழுதுகிறேன். ஒரு தாய் தன் மகனுக்கு திருமணம் நடைபெற வேண்டும் என்பதற்காக பெருமுயற்சிகளைச் செய்து கொண்டிருந்தார். அவருடைய மகன் அயல்நாட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். எத்தனையோ முயற்சிகள் செய்தும் சரியான பெண் அமையாமல் கவலைப்பட்டார். அப்பொழுது தாய் ஜோதிடரை அனுகி ஏதாவது பரிகாரம் செய்தால் வரன் அமையுமா என்று கேட்டார். ஜோதிடரும் மகன் வரும் பொழுது அவரை கங்காதீஸ்வரர் கோவிலுக்கு அழைத்துச் சென்று விளக்கேற்றி வழிபடுமாறுக் கூறினார். விடுமுறையில் மகன் ஊரிலிருந்து வந்தார் அப்பொழுது அவர் தாயார் ஜோதிடர் கூறியதை மகனிடம் தெரிவித்தார் அவர் மகன் மிகவும் இறை நம்பிக்கை உடையவர். கோவிலுக்கும் போகக் கூடியவர் ஆனால் தனது திருமணம் நடைபெறுவதற்காக தானாக கடவுளிடம் சென்று எந்த வேண்டுதலையும் செய்ய போவதில்லை என்பதில் உறுதியாக இருப்பதாகக் கூறி கோவிலுக்குச் சென்று விளக்கு போட மறுத்து விட்டார் விடுமுறை நாட்களும் கழிந்து மகன் ஊருக்கு சென்றார். அப்பொழுது அந்த தாயாரிடம் திருமணம் இனிதே நடைபெறும் பதிகத்தின் பெருமையை அவருடைய நண்பர் கூற தாயாரும் மகனுக்காக மனம் உருகி தினமும் இப்பதிகத்தைப் படிக்க ஆரம்பித்தார். பதினைந்து நாட்களில் தாயாரின் உடல்நிலை பாதிக்கப்பட்டு உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்ற நிலை உருவானது அயல் நாட்டிலிருந்து தாயை காணுவதற்காக மகன் உடனடியாக வந்தார் வந்தவர் மருத்துவமனையில் தாயாருடன் இருந்தார். அப்போது தாயாருக்கு ஸ்கேன். எடுக்க வேண்டுமென்பதற்காக சென்னையில் புரசைவாக்கத்திலுள்ள ஸ்கேன் சென்டருக்குத் தாயை அழைத்துச் சென்றார். ஸ்கேன் எடுக்குமிடத்தில் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்பொழுது ஸ்கேன் சென்டருக்கு அருகேயுள்ள கோவிலுக்குச் சென்று வரலாம் எனறு தாயார் கூற மகனும் தாயாருடன் கோலிலுக்குச் சென்றார். அந்த கோவில் கங்காதீஸ்வரர் கோவில் தாய் கடையில் இருந்த அகல் விளக்குகளை வாங்கி தான் ஒன்றையும் மகனை ஒன்றையும் ஏற்றச் செய்தார்.



கோவிலை வலம் வருகையில் இந்த பதிகத்தைத் தாயார் மனமுருகப் படித்தார் பின்னர் ஸ்கேன் சென்டருக்குச் சென்று வேலைகளை முடித்து மருத்துவமனைக்குத் திரும்பினார்கள் இரண்டு நாட்களில் தாயாருக்கு பெரிய பிரச்சனை இல்லையென்று மருத்துவர் கூறி வீட்டிற்கு அனுப்பினார். மகனும் ஊருக்கு கிளம்பி சென்று விட்டார். தாய் மனமுருக தினமும் இப்பதிகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். எண்ணி முப்பதாவது நாளில் அவர் உடல்நலம் சரியில்லாமல் இருந்ததைக் கேள்வியுற்ற அவருடைய தூரத்து உறவினர் போன் செய்து நலம் விசாரிக்கையில் அவருடைய தெரிந்தவரின் பெண்ணிற்கு வரன் பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறினார். தாயும் தன் மகனுக்கு வரன் பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறவே அவரும் மகனுடைய ஜாதகத்தை அனுப்புமாறு கூறினார். தாயாரும் அனுப்பி வைத்தார். இறைவனின் அருளால் ஜாதகம் பொருந்தவே அனைவருடைய சம்மதத்தோடு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணம் சிறப்பாக நடந்தது.

அன்பர்களே! இந்த பதிகத்தின் மகிமையை என்னென்று சொல்வது தாயருக்கு உடல்நிலையை சரியில்லாமல் ஆக்கி மகனை வரவழைத்து முடியாது என்றவரை தனது கையாலே விளக்கு ஏற்ற வைத்து தாயின் உடல்நிலையையும் சரியாக்கி திருமணத்தையும் ஒரு மண்டலத்திற்குள் நிச்சயிக்கச் செய்த இப்பதிகத்தின் பெருமையை நாம் வாழ்நாளில்; கண்டோம்.நீங்களும் மனமுருகி நம்பிக்கையுடன் பதிகங்களைப் பாராயணம் செய்து பலன் பெறுவீர்களாக. இன்னும் மற்றொரு பதிகத்தில் மீண்டும் சந்திப்போம்.


அனைவருக்கும் நன்றி,திருச்சிற்றம்பலம்

அன்புடன்
கலாவதி, ஊட்டி

*****

# நம்பினோர் கெடுவதில்லை

ஆசிரமம் ஓன்றில் மக்கள் அனைவரும் கூடியிருந்தார்கள் அந்த ஆசிரமத்திற்கு மிகப்பெரிய மகான் ஒருவர் வருவதாக இருந்தது. ஆசிரமத்தின் குருவும் அவருடைய சீடர்களும் மகான் வருவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு இருந்தார்கள். மகான் உள்ளே நுழைந்தார் அவருடைய இருக்கையில் வந்து அமர்ந்தார். உபதேசங்களை வழங்கினார். முடிவில் மக்கள் அனைவரும் அவரிடத்தில் அவரவர்களுடைய உள்ளத்தில் எழுந்த கேள்விகளைக் கேட்டனர். மகானும் பதிலளித்தார் பெரும்பாலான மக்கள் இறைவனை அடைவதற்கு வழியை எப்படி நிர்ணயிப்பது என்று கேட்டார்கள் அப்பொழுது மகான் 'சற்று பொறுங்கள் விடையளிக்கிறேன் " என்று கூறி குருவை அழைத்தார் குருவினுடைய காதில் ஏதோ கூறினார். அவர் சொன்னதைக்கேட்டு குருவும் அந்த இடத்தில் இரண்டு பெரிய கம்பங்களை நட்டு அதில் ஒர் கயிற்றை இழுத்துக் கட்டினார். மகான் குருவினுடைய ஒரு சீடரை அழைத்து கண்களை மூடிக் கொண்டு அந்த கயிற்றின் மேல் நடக்குமாறுக் கூறினார். சீடர் தயங்கினார் மகானோ “உன்னுடைய குருவிடம் சென்று அவருடைய ஆசியைப் பெற்று நட” என்றார்.



சீடரும் குருவிடம் சென்று அவரிடத்தில் வணங்கி குருவினுடைய காதில் ஏதோ சொன்னார். பிறகு நடக்க ஆரம்பித்தார் சரியாக கயிற்றில் நடந்து சென்றார் மகான் இன்னொரு சீடரை அழைத்து அதே போன்று செய்யுமாறுக் கூறினார். அவரும் குருவிடம் சென்று வணங்கி அவருடைய காதில் ஏதோ கூறி கயிற்றில் நடக்க ஆரம்பித்தார். அவர் பகுதி நடக்கும் போது தடுமாற ஆரம்பித்தார். தடுமாற்றம் கூடியது. இன்னும் ஒரு அடி எடுத்து வைக்கும் பொழுது கால் இடறி கீழே விழுவோம் என்ற நிலை உருவானது அச்சமயத்தில் குரு ஒடிவந்து தனது சீடரின்

கரத்தைப் பிடித்து விழாமல் அவரை நடத்தி அடுத்த முனையில் கொண்டு இறக்கினார். இதைக் கண்ட மக்கள் ஒன்றும் புரியாமல் இருந்தனர். எனவே மகானைப் பார்த்து 'இந்த இரண்டு நிகழ்வுகளின் மூலம் நீங்கள் என்ன சொல்ல விழைகிறீர்கள்" என்று கேட்டனர். அதற்கு மகான் புன்முறுவலுடன் சொல்லத் துவங்கினார். "முதலாமவர் குருவிடம் சென்று தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும் குருவின் பெயரை உச்சரிக்கப் போவதாகவும் தன்னை விழாமல் வழிநடத்திச் செல்ல வேண்டும் என்று ஆசிப் பெற்று நடக்கத் துவங்கினார். அதன்படி குருவும் ஆசி வழங்கினார். அவரும் குருவின் நாமத்தைச் சொல்லி கடந்து முடித்தார். ஆனால் இரண்டாமவரோ குருவின் காதில் என்ன சொன்னார் தெரியுமா? என்னை நீங்கள் கீழே விழவிடமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு பரிபூரணமாக இருக்கிறது என்று கூறி நடக்கத் தொடங்கினார். எனவே தான் தன் மீது நம்பிக்கைக் கொண்டவன் தடுமாறும் சமயத்தில் குருவே ஒடி வந்து அவனை கடக்கச் செய்தார்.

நாமும் இது போலத்தான் கடவுளின் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தால் கடவுளைக் காண முடியும் என்பது எவ்வளவு உண்மையோ அதைவிட கடவுளின் மீது பரிபூரண நம்பிக்கைக் கொண்டிருந்தால் கடவுள் நம்மைக் கைவிடாமல் ஒடிவந்து காப்பார் என்பதும் உண்மை. ஆகவே கடவுளிடம் நாம் பரிபூரண நம்பிக்கை வைப்பதால் நாம் கடவுளைக் காண்பதை விட கடவுள் நம்மை வந்து காண்பார் என்பது உண்மை" என்று கூறினார். இதைதான் நம் முன்னோர்கள் ' நம்பினோர் கெடுவதில்லை இது நான்மறைத் தீர்ப்பு" என்றுக் கூறினார்கள். ஆகவே நாமும் கடவுளிடம் முழு நம்பிக்கைக் கொண்டால் எப்பொழுதும் கடவுள் நம்மைக் கைவிட மாட்டார் என்ற உறுதியே நம்மை எத்தனை சோதனைகள் வந்தாலும் வழி நடத்திச் செல்லும் அதுவே நமக்கு நல்வழிக் காட்டும்.

வாழ்க வையகம்

அன்புடன்
மனோகர்
குவைத்

*****

# தெரிந்த புராணம்; தெரியாத கதைகள்

**- செல்வி அ. பூஜிதா**

மகாபாரதம் அனைவருக்கும் தெரிந்த புராணமே. அதுவும் தற்போது தொடர்ந்து வரும் ஊரடங்கு காலகட்டத்தில் இந்த மகா புராணத்தை சிறியவர் முதல் பெரியவர் வரை விரும்பி பார்த்தோ, படித்தோ, கேட்டோ மகிழ்ந்தனர். கடந்த இதழில் "மகாபாரத கொடிவழி" பற்றி தெரிந்து கொண்டோம். இனிவரும் நாட்களில், இப்புராணத்தில் இருந்து பெரும்பாலும் தெரியாத கதைகள் பற்றி பார்ப்போம். எனக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் என் அம்மா, அப்பாவுக்கு நன்றி.

## பார்பாரிகனின் கதை

பார்பாரிகன், பீமனின் மகன் கடோத்கஜனுக்கும், அகிலவாதிக்கும் பிறந்தவன். மகாபாரதத்தின் ஒரு முக்கயமான கதாப்பாத்திரம் இந்த பார்பாரிகன், ஆனால் வியாசரின் மஹாபாரதத்தில் இவரை பற்றி குறிப்பிடவில்லை. பார்பாரிகன் ராஜஸ்தானில் கட்டுசியாமராகவும், குஜராத்தில் பலியதேவராகவும் வழிபடப்படுகிறார். இவர் குருக்சேத்திரப் போருக்கு முன்னதாகவே பாண்டவர்களின் வெற்றிக்காக இறந்தார். இதனால் கிருஷ்ணர் பார்பாரிகனுக்கு வரமளித்தார் எனவும் கூறப்படுகிறது.

பார்பாரிகன் சிறந்த சிவபக்தராக விளங்கி வந்தார். அவரின் பக்திக்கு சிவா பெருமான் மனமிரங்கி மூன்று அம்புகளை தந்தார். அக்னி தேவரும் இவருக்கு ஒரு வில்லை வரமளித்தார். அந்த வில் பார்பாரிகனை வெல்ல இயலாத வீரனாய் மாற்றியது. அம்மூன்று வில்களின் முதல் வில் பார்பாரிகனின் குறி வைக்கும். இரண்டாவது அக்குறியில் வீழ்த்தவேண்டியவர்களை மட்டும் குறியீடும். மூன்றாவது வில் குறியீட்டை மனிதர்களை மட்டும் வீழ்த்தி மூன்றும் பார்பாரிகனிடம் வரும்.

குருக்ஷத்திரப் போருக்கு செல்வதற்கு முன் பார்பாரிகன் அவன் தாய் அகிலாவதியிடம், "போரில் நான் பங்கேற்க நீரினால் எப்பக்கம் வலு இழந்துக் கொண்டிருக்கிறதோ அப்பக்கம் நின்று நான் போர் புரிவேன்", என்றான்.

பாரதப்போர் ஆரம்பிப்பதற்கு முன்பு க்ரிஷ்னர் பாண்டவர்களிடமும் கௌரவர்களிடமும் இருக்கும் மாவீரர்களிடம் தங்களால் எத்தனை நாட்களில் தனியாக இப்போரை முடிக்க முடியும் என்று வினவினார். கௌரவர்கள் பக்கம், பிதாமகர் பீஷ்மர் தன்னால் 20 நாட்களில் முடிக்க முடியும் என்றார். குரு துரோணாச்சாரியார் தன்னால் 25 நாட்களில் முடிக்க முடியும் என்றார். அங்கதேச அரசன் கர்ணன் தன்னால் 24 நாட்களில் போரை முடிக்க முடியும் என்றார். பாண்டவர்கள் பக்கம் அர்ஜுனன் தன்னால் 28 நாட்களில் போரை முடிக்க முடியும் என்றான்.

பார்பாரிகனிடம் கேட்பதற்கு முன் கிருஷ்ணர் ப்ராஹ்மண தோற்றமேற்றார். பின்னர் இந்த கேள்வியை பார்பாரிகனிடம் கேட்டார், அதற்க்கு அவன் ஒரு நிமிடத்தில் முடிக்க முடியும்

என்றார். ஆச்சிரியமான கிருஷ்ணர் எப்படி என்று கேட்டார், பார்பாரிகன் அதற்க்கு என்னிடம் மூன்று அம்புகள் உள்ளது என்று கூறினார். பின்பு அவனின் அம்புகள் சக்தியை விளக்கினார்.

பார்பாரிகனின் சக்தியை சோதிக்க கிருஷ்ணர் அவனை அரச மரத்தில் இருக்கும் அனைத்து இலைகளையும் கட்டச் சொன்னார். பின்பு பார்பாரிகன் தந்து முதல் அம்பை வைத்து குறிவைத்தான். இதற்கிடையில் கிருஷ்ணர் ஒரு இலையை எடுத்து தனது பாதத்திற்கு அடியில் மறைத்துக்கொண்டார்.



இப்பொழுது அந்த அம்பு அனைத்து இலைகளையும் குறி வைத்த பிறகு கிருஷ்ணரின் கால்களை சுற்றி வந்தது. கிருஷ்ணர் பார்பாரிகனிடம், "என்ன நடக்கிறது?" என்று கேட்டார். ஒரு இலை தங்களின் பாதத்தில் அடியில் இருக்கும். தாங்கள் தங்கள் பாதங்களை தூக்குங்கள் இல்லையென்றால் தங்கள் பாதங்களை குத்தி கிழித்துவிடும் என்றான் பார்பாரிகன்.கிருஷ்ணர் பார்பாரிகனின் சக்தியைப் புரிந்து கொண்டார். பின்பு அவன் பாண்டவர்களுக்கு எதிராக போர் புரிந்தால் என்னவாகும் என்று யோசித்தார். பின் அவர் பார்பாரிகனிடம், "நீ எப்பக்கம் போர் புரிவாய் என்று கேட்டார்?" அதற்க்கு அவன் தன் தாயிடம் கூறியதை சொன்னான்.

பின் கிருஷ்ணர் விளக்கினார், "நீ எப்பக்கம் நிற்கிறாயோ அப்பக்கம் வெல்வது உறுதி ஆனால் நீ பாண்டவர்கள் பக்கம் நின்றால் எதிரிகள் பலம் இழந்துவிடுவார்கள், கௌரவர்கள் பக்கம் நின்றால் பாண்டவர்கள் வலு இழப்பார்கள். நீ மாறி மாறி நின்று போர் புரிந்தால் நீ ஒருவன் மட்டுமே உயிரோடு இருப்பாய்". கிருஷ்ணர் கூறியது பார்பாரிகனுக்கு விளங்கியது. பின்பு ப்ராஹ்மண வேடத்தில் இருந்த கிருஷ்ணர் யாசகம் வேண்டி பார்பாரிகனின் தலையை வேண்டினார்.

அதிர்ச்சி அடைந்த பார்பாரிகன் அவரிடம் தன உண்மையான உருவத்தை காட்ட கூறினான். கிருஷ்ணர் பார்பாரிகனுக்கு தனது ஸ்ரீ மகா விஷ்ணு தசாவதாரத்தை காட்டினார். இதை பார்த்த பின்பு பார்பாரிகன் வேண்டினான், நான் தங்களின் யாசகத்தை தருகிறேன், ஆனால் நான் போரை காண வேண்டும் என்றான். பின்பு பார்பாரிகனின் தலையை ஒரு மலையின் உச்சியில் வைத்து கிருஷ்ணர் அருள் புரிந்தார்.

*****